# DEPOSITION OF WITNESS

# IN THE COURT OF PRINCIPAL SESSIONS JUDGE, SALEM.

S.C.No.197/2023

Deposition of witness – PW-3

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | ஞானபிரகாசம் | Caste | : |
| S/o. | : | மாணிக்கம் | Calling | : |
| Village | : | | Religion | : |
| Taluk | : | | Age | : |

Solemnly affirmed on 04.03.2026 in accordance with the provisions of Oaths Act No.44 of 1969.

Accused present.

முதல் விசாரணை :

நான் ஊனத்தூரில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி ஆனந்தனை எனக்குத் தெரியும். அவர் உள்ளூர்க்காரர் என்பதால் அவரைத் தெரியும். வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை. வழக்கு சம்மந்தமாக காவல் ஆய்வாளர் என்னை விசாரிக்கவில்லை.

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.

<u>அரசுத்தரப்பில் குறுக்கு விசாரணை</u> :

காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்தார் என்றும் அந்த விசாரணையின்போது பெருமாள் மனைவி காயத்ரிக்கும் ஆஜர் எதிரி ஆனந்தனுக்கும் பழக்கம் இருந்தது என்றும், 01.06.2020ம் தேதி இரவு 8.00 மணிக்கு ஊனத்தூர் அரசு பள்ளி பின்புறம் உள்ள மைதானத்திற்கு அருகே சென்று கொண்டிருக்கும்போது அங்கு பெருமாள் என்பவரை ஆஜர் எதிரி ஆனந்தன் குடிபோதையில் ஆபாசமாக திட்டி நொண்டிப்பயலே உன் பொண்டாட்டி என்கூட வந்துட்டாளானு பார்க்க வந்தியா என தகாத வார்த்தையால் திட்டி நெஞ்சில் எட்டி உதைத்ததாகவும், பெருமாள் கீழே விழுந்துவிட்டார் என்றும் அருகில் இருந்த மாடு கட்டும் கம்பியை எடுத்து பெருமாளின் வலது கை, மற்றும் இடது கால் முட்டியில் மாறி மாறி ஓங்கி அடித்தார் என்றும், அருகில் இருந்த மற்றவர்களும் நானும் விலக்கி விட்டோம் என்றும் பின்னர் எதிரி ஆனந்தன் கம்பியை காட்டி பெருமாளை பார்த்து உன்னை கொல்லாமல் விடமாட்டேன் என்று மிரட்டியதாகவும் பின்னர் பெருமாளை அரசு மருத்துவமனைக்கு ஆம்புலன்ஸ் மூலமாக அனுப்பி வைத்தேன் என்றும் போலிஸ் விசாரணையில் சொல்லிவிட்டு ஆஜர் எதிரி உள்ளூர்க்காரர் என்பதால் அவர் கேட்டுக்கொண்டதற்காக உண்மையை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை – இல்லை.

Sd/– S.Sumathy,

Principal District Judge, Salem.